[2022 ஏப்ரல் 8

83—

ஆவின் கிளை நிலையம்

*15578—**திரு. மு. சக்ரபாணி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் ஆவின் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் ஆவின் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஐயா ஓ.பி.எஸ். அவர்களையும், ஆற்றல்மிக்க விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர் அருமை சகோதரர் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்குட்பட்ட கண்டமங்கலம் ஒன்றியத்தில் 60 கிராமங்கள் உள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் முழுக்க முழுக்க விவசாயத்தையும், கால்நடைகள் வளர்ப்பதையும்தான் தொழிலாகக் கொண்டுள்ளனர். விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, இந்த ஒன்றியத்தில் உற்பத்தியாகும் பாலை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கு வசதியாக ஆவின் கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா

2022 ஏப்ரல் 8]

என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில், புருஷானூர், சிறுவந்தாடு ஆகிய இரண்டு தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தினசரி 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் வரை மட்டுமே பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆவின் கிளை நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 500 லிட்டரிலிருந்து 5000 லிட்டர் வரை பால் உற்பத்தி இருந்தால் மட்டுமே ஆவின் கிளை நிலையம் அமைக்க இயலும். எனவே, தற்போது வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் ஆவின் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

திரு. மு. சக்ரபாணி: *பிரதான எதிர்க்கட்சியான எங்களுக்கும் ஓரளவுக்கு வாய்ப்பளிக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலத்தின் சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கண்டமங்கலம் கிராமத்தில் புது வாழ்வுத் திட்டத்தின்கீழ் பால் பதனிடும் நிலையம் ஒன்று ஆரம்பிக்க ஆணை பிறப்பித்து, அதற்குத் தேவையான இடமும் ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்திற்கு 36 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, தேவையான machineries–ம் பொருத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போடாமல், மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு அந்த பால் பதனிடும் நிலையத்தை ஆவின் கிளை நிலையமாக பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் ஆவின் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல அங்கு ஒட்டுமொத்தமாக 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் வரைதான் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. அது போதிய அளவு இல்லாத காரணத்தால், அந்த இடத்தில் ஆவின் கிளை நிலையம் உருவாக்குவது என்பது மிகவும் கடினம், செலவும் அதிகமாகும். ஆகவே, மிக விரைவில் அந்த இடத்தை ஆய்வு செய்து, மேலும் பால் உற்பத்தியை அதிகப்படுத்தும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல அங்கு மொத்த பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

உக்ரைன் நாட்டில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் மாணவர்களின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உக்ரைன் நாட்டில் மருத்துவப் படிப்பு பயின்றுவரும் மாணவர்களின் நிலை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. S. சந்திரன், திரு. வை. முத்துராஜா, திரு. A.P. நந்தகுமார், திரு. இ. கருணாநிதி, திரு. A. நல்லதம்பி, திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, டாக்டர் நா. எழிலன், திரு. ப. கார்த்திகேயன், திரு. தி. வேல்முருகன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், அ.இ.அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. செல்வபெருந்தகை மற்றும்